DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. - 128/2024

Prosecution PW -1

| | | |
|---|---|---|
| Name | திரு. கார்த்திக் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 08.01.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 to A3 Present.

<u>முதல் விசாரணை</u>

நான் கடலூர் மாவட்டம் பரங்கிபேட்டை காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.07.2024 ம்தேதியன்று பன்ரூட்டி மதுவிலக்கு அமல்பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 14.30 மணிக்கு உதவி ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில் நிலைய ஆஜரில்இருந்த என்னையும் தலைமை காவலர்கள் கோபி , அருள்பிரகாஷ், கார்த்திகேயன், ஆகியோர் சகிதம் 14.50 மணிக்கு நிலையத்திலிருந்து அரசு வாகனத்தில் புறப்பட்டு பன்ரூட்டி கும்பகோணம் சாலையிலுள்ள PRS ஓட்டல் எதிரில் சென்று கண்காணித்தபோது உதவி ஆய்வாளரிடம் இரகசிய தகவலாளி மூன்று நபர்களை அடையாளம் காட்டிவிட்டு சென்றுவிட்டார். அநத் மூன்று நபர்கள் போலிசாராகிய எங்களை பார்த்ததும் ஓட முயற்சித்தார்கள். அவர்களை மடக்கி பிடித்து உதவி ஆய்வாளர் அவர்கள் அடையாள அட்டையை காண்பித்து தங்களை அறிமுகம் செய்து கொண்டு எதிரிகளை விசாரிக்க 1 வது நபர் தனது பெயர் சையது சலீம் என்றும் 2 வது நபர் மெதுன் ராஜ், 3 வது நபர் பிரியதர்ஷன் என்று பெயர் விலாசத்துடன் கூறினார்கள். ஆஜர் 1 முதல் 3 எதிரிகள் தான் அந்த நபர்கள். உதவி ஆய்வாளர் அவர்களிடம் நீங்கள் கஞ்சா என்னும்போதைபொருள் விற்பனைக்காக வைத்திருப்பதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் உங்களை சோதனை செய்ய அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமோ அல்லது அருகாமையிலுள்ள நீதிதுறை நடுவரிடமோ அழைத்து சென்று சோதனை செய்து கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு என்று எடுத்து கூறி விளக்கி சோதனை அறிவிப்பு தனிதனியாக சார்வு செய்தார். அந்த சோதனை அறிவிப்புகள் அதசாஆ **1** முதல் **3**. எதிரிகள் சோதனை அறிவிப்புகளை பெற்றுகொண்டு தங்களை எங்கும் அழைத்து செல்ல வேண்டாம் உதவி ஆய்வாளராகிய நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார்கள். அதை உதவி ஆய்வாளர் பதிவு செய்து கொண்டு அந்தசம்மத கடிதத்தில் 1 முதல் 3 எதிரிகளிடம் தனிதனியாக எழுதி கையொப்பம் பெற்றார். அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ **4** முதல் **6**. சம்பவ இடத்தில் பொது மக்கள் யாரும் இல்லாததால் உதவி ஆய்வாளர் என்னையும்,

தலைமை காவலர் கோபியும் சாட்சிகளாக முன்னிருத்தி 1 முதல் 3 எதிரிகளை சோதனை செய்தார்கள். 1 வது எதிரி சையது சலீம் என்பவர் தான் வைத்திருந்த வெள்ளை நிற பாலிதின் பையை உதவி ஆய்வாளரிடம் ஆஜர் செய்தார். அந்த பையை உதவி ஆய்வாளர் பிரித்து பார்த்தபோது அதில் உலர்ந்த பசுமை நிற இலை, பழுப்பு நிற காய், கதிர், நொருங்கிய நிலையில்இருந்தது. அதை உதவி ஆய்வாளர் எடுத்து தேய்த்து முகர்ந்து பார்க்கையில் அது நெடியுடன் கூடிய கஞ்சா என தெரிய வந்தது. கஞ்சா என தெரிய வந்த காரணத்தினால் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரிகள் கஞ்சா வைத்திருக்க எந்தவித அரசு அனுமதியோ இல்லை என காரணத்தை கூறி எதிரிகளுக்கு தனிதனியாக கைது நமூனா சார்வு செய்தார். அந்த கைது நமூனாக்கள் அதசாஆ **7** முதல் **9.** பின்னர் 16.15 மணிக்கு அவரது உறவினர்களுக்கு போன் மூலம் தகவல் சொன்னார். பின்னர் 1 வது எதிரி தாமாக முன் வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அநத் ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் இல்லாததல் என் முன்பாகவும் தலைமை காவலர் கோபி முன்பாகவும் 16.20 முதல் 17.20 மணி வரை பதிவு செய்தார். அநத் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 வது எதிரி வைத்திருந்த வெள்ளை நிற பாலிதின் பையை நாங்கள் எடுத்து சென்ற எலக்ட்ரானிக் தராசில் எடைபோட்டு பார்க்க 2 கிலோ கஞ்சா இருந்தது. அந்த கஞ்சா பொட்டலத்தை மடித்து அதன் மேல் வெள்ளை பேப்பரில் வழக்கு சொத்தின் விவரம் எதிரிகளின் பெயர், விவரம் குறிப்பிட்டு எதிரிகளிடம் கையொப்பம் பெற்றார். சாட்சிகளான நானும் தலைமைகாவலர் கோபியும் கையெழுத்திட்டோம். பின்னர் உதவி ஆய்வாளர் கையொப்பம் செய்தார். பின்னர் கஞ்சா பொட்டலத்தை நூலால் கட்டி SHO சீல் வைத்தார். பின்னர் கஞ்சா பொட்டலத்தை உதவி ஆய்வாளர் 17.30 மணிக்கு மகசரில் கைபற்றினார். அதில் 1 வது எதிரியின் கையொப்பம் பெறப்பட்டது. பின்னர் சாட்சிகளான நானும் தலைமைகாவலர் கோபியும் கையெழுத்திட்டோம். உதவி ஆய்வாளர் கையொப்பம் செய்தார். அந்த கைபற்றுதல் மகசர் அதசாஆ **10.** பின்னர் எதிரிகள் மற்றும் தடய சொத்துடன் சம்பவ இடத்திலிருந்து புறப்பட்டு 19.00 மணிக்கு நிலையம் வந்து பன்ரூட்டி மதுவிலக்கு அமல்பிரிவு குற்ற எண் 1396/2024 பிரிவு 8(c)20(b)(ii)(B) of NDPS Act ன் படி உதவி ஆய்வாளர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். அதற்கு நான் உதவியாக இருந்தேன். என்னை பொறுப்பு காவல் ஆய்வாளர் ஸ்ரீபிரியா அவர்கள் விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்</u>

உதவி ஆய்வாளருக்கு வந்த இரகசிய தகவல் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் சுமார் 2 மணி நேரம் இருந்தோம். நாங்கள் சம்பவ இடம் சென்றபோது மூன்று நபர்களும் நின்றுகொண்டிருந்தார்கள். அதில் 1 வது எதிரி வெள்ளை பையை வைத்திருந்தார் மற்ற 2 எதிரிகள் என்ன வைத்திருந்தார்கள் என்று தெரியவில்லை. மூன்று எதிரிகளுடன் வேறு யாரும் நிற்கவில்லை அவர்கள் தனியாக தான் நின்றுகொண்டிருந்தார்கள். இரகசிய தகவலாளி எங்களோடு சம்பவ இடத்திற்கு வரவில்லை அங்கு வந்து உதவி ஆய்வாளரிடம் அடையாளம் காட்டினார். அவர் எங்கிருந்து வந்தார் என்று எனக்கு தெரியாது. அதசாஆ 1 முதல் 10 ஐ உதவி ஆய்வாளர் தான் எழுதினார். எதிரிகளுக்கு சோதனை அறிவிப்பு ஒரே நேரத்தில் தான் கொடுத்தோம். அதசாஆ 1 முதல் 3 ஐ எழுதிய நேரம் தெரியவில்லை. கொடுத்தது மூன்று எதிரிகளுக்கும் 15.45 மணிக்கு.

15.30 மணிக்கு சம்பவ இடம் சென்றோம். 1 முதல் 3 எதிரிகளுக்கு சோதனை அறிவிப்பு சார்வு செய்த பிறகு அவர்கள் வாய் மொழியாக சம்மதம் தெரிவித்த பின்னர் உதவி ஆய்வாளர் அதை பதிவு செய்து பின்னர் 1 முதல் 3 எதிரிகளிடம் கையொப்பம் பெற்றார். அதை எத்தனை மணிக்கு 1 முதல் 3 எதிரியிடம் கையொப்பம் பெறப்பட்டது அதுவும் 15.45 மணிக்கு தான் பெறப்பட்டது. அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் தயார் செய்யப்பட்டதால் தான் ஒரே நேரம் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தான் எழுதப்பட்டது. நான் தேதியிட்டு கையெழுத்து செய்யவில்லை. சம்பவ இடம் ஆள்நடமாட்டம் இருக்கும் அதிகமாக இருக்காது. நான் ஆட்கள் நடமாட்டம் அதிகமாக இருக்காது என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஆய்வாளர் விசாரணையில் யார் யாரை அழைத்தோம் வர மறுத்தார்கள் என்று சொன்னேனா என்றால் இது குறித்து ஆய்வாளர் கேட்கவில்லை. சம்பவ இடத்தில் நடந்த நிகழ்வை குறித்து வீடியோ பதிவு செய்யவில்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் நான் சொல்வது போல் சம்பவமே நடக்கவில்லை என்றாலும் உயர் அதிகாரி கேட்டுகொண்டதற்கு இணங்க காவல்நிலையத்தில் வைத்து தயாரித்த ஆவணங்களில் கையெழுத்து போட்டுவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் சம்பவ இடத்தில் வீடியோ எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

ஒம்/ஜி.சுந்தரராஜன்
அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்